# கிறிஸ்துவுக்கு சாட்சிகள்

Transcribed from a message spoken in October 2012, in Chennai

By *R.S.Milton*

சமீப காலத்தில் செயின்ட் லூசியஸ் என்று ஒருவர் வாழ்ந்ததாகச் சொல்கிறார்கள். அவருடைய விசுவாசத்தினிமித்தம் அவரைச் சித்திரவதை செய்வதற்காகக் கைதுசெய்தபோது அவரை விசாரித்தார்களாம். "நீ யார்?" அவருடைய பதில்: நான் ஒரு கிறிஸ்தவன். அடுத்த கேள்வி: உன் நாடு எது? அவருடைய பதில்: நான் ஒரு கிறிஸ்தவன். மூன்றாவது கேள்வி: உன் தொழில் என்ன? அவருடைய பதில்: நான் ஒரு கிறிஸ்தவன். "Who are you?" "I am a Christian". "What is your country?" "I am a Christian". "What is your profession?" "I am a Christian".

## உலகத்தின் வெளிச்சம், பூமிக்கு உப்பு

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தைவிட்டுப் பரத்திற்குச் செல்வதற்குமுன் தம் சீடர்களுக்குக் கொடுத்த கடைசி கட்டளையை அப்போஸ்தலர் 1:8இல் நாம் வாசிக்கிறோம். "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயாவிலும், சமாரியாவிலும், பூமியின் முடிவுபரியந்தமும் அல்லது கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்". இந்த இருண்ட உலகத்தில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஒளியாக இருக்கிறார். "நான் உலகத்திற்கு ஒளியாக இருக்கிறேன்" (யோவான் 8:12) என்று இயேசுகிறிஸ்து சொன்னார். அது மட்டுமல்ல. அவர் தம் சீடர்களைப் பார்த்து, "நீங்கள் இந்த உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" (மத். 5:14) என்றும் சொன்னார். நம் ஆண்டவர், நம் எஜமான், நம் குரு இயேசுகிறிஸ்து எப்படி இந்த உலகத்திற்கு ஒளியாக இருக்கிறாரோ அதுபோல அவருடைய பிள்ளைகளாகிய அல்லது சீடர்களாகிய நாமும் இந்த உலகத்திற்கு ஒளியாக இருப்போம். "நீங்கள் இந்தப் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" (மத். 5:13) என்று ஆண்டவர் சொன்னார்.

## நம் பரம அழைப்பு

நாம் இந்த உலகத்தில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சிகளாயிருக்கிறோம் அல்லது இயேசு கிறிஸ்துவுக்குப் பிரதிநிதிகளாயிருக்கிறோம். இது நம் அழைப்பு. இந்தப் பூமியிலே நாம் இயேசு கிறிஸ்துவை வெளிக்காண்பிக்கிறவர்களாக, வெளியரங்கமாக்குகிறவர்களாக வாழ்வதுதான் நம் பரம அழைப்பு. இந்த உலகத்தில் நன்மைகள், இன்பங்கள், சுபிட்சம் என்று என்னவெல்லாம் இருக்கிறதோ அந்த எல்லா நன்மைகளையும், இன்பங்களையும், சுபிட்சத்தையும் நாம் இந்த உலகத்திலே அனுபவிப்போம் என்பது தேவனுடைய மக்கள் பலருடைய கருத்து. ஆனால், அது தவறு. நான் இப்படிச் சொல்வது உங்களுக்குத் துக்கத்தை ஏற்படுத்தலாம். நம் பிதா அன்புள்ளவராயிருந்து, இந்த உலகத்திலே போதுமான நன்மைகளையும், இன்பங்களையும், சுபிட்சத்தையும் நமக்கு அருள்கிறார். ஆனால், அது நம் அழைப்பல்ல.

இது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்குக் கொடுக்கிற சவால். தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் "தாயின் வயிற்றிலிருந்து அண்ணகர்களாய்ப் பிறந்தவர்களும் உண்டு; மனிதர்களால் அண்ணகர்களாக்கப்பட்டவர்களும் உண்டு; தங்களை அண்ணகர்களாக்கிக்கொண்டவர்களும் உண்டு" (மத். 19:12). தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் இந்த உலகத்தின் நன்மைகளையும், இன்பங்களையும், சுபிட்சத்தையும் இழப்பதற்குத் தீர்மானித்துக் கொண்டவர்கள் உண்டு; மனிதர்களால் அண்ணகர்களாக்கப்படுகிறவர்களும் உண்டு. இது கொடுமையானது. இது "கர்த்தர் உன்னை அழைத்திருக்கிறார்; உன் வேலையை விடு," என்று சொல்லி ஒருவனை அண்ணகனாக்குவது. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின்மேலுள்ள அன்பால் இந்த உலகத்தில் தான் பெற்று அனுபவிக்க வேண்டிய நன்மைகளையும், இன்பங்களையும், சுபிட்சத்தையும் விடுகிறவன் அல்லது குறுக்கிக்கொள்கிறவன் அல்லது சுருக்கிக்கொள்கிறவன் உண்டு. அதனால் நாம் அஞ்ச வேண்டாம். அவர் நம் திராணிக்கு மிஞ்சி நம்மை வற்புறுத்துவதில்லை. இயேசுகிறிஸ்து எவ்வளவு அற்புதமானவர் என்று நாம் உணரும்போதுதான் அதை நாம் செய்வோம்; அப்படிச் செய்வோம் என்று அவர் எதிர்பார்ப்பார். அவர் எவ்வளவு அற்புதமானவர் என்பதை நாம் பார்க்காதவரை அப்படிச் செய்வதற்கு அவர் நம்மை வற்புறுத்தவே மாட்டார். உங்கள் அழைப்புக்கு நீங்கள் அஞ்ச வேண்டாம். ஆனால், "நீர் எவ்வளவு அற்புதமானவர்! எவ்வளவு அருமையானவர்! எவ்வளவு மேன்மையானவர்! போதுமானவர்! நிறைவானவர்! (அவரை வர்ணிப்பதற்கு வார்த்தைகள் இல்லை) என்பதை நான் காண்பதற்கு எனக்கு உதவி செய்யும்," என்று நாம் ஜெபிக்கலாம். உலகத்தில் நன்மைகளையும், இன்பங்களையும், சுபிட்சத்தையும்

தேவன் நமக்குத் தருகிறார். ஆனால், "இயேசுகிறிஸ்து யார், எப்படிப்பட்டவர், அவருடைய குணம் என்ன, அவருடைய கட்டமைப்பு என்ன, அவருடைய வழிகள் என்ன, அவருடைய வல்லமை என்ன!" என்பதை இந்த உலகத்திற்கு காண்பிக்கவேண்டியது, அறிவிக்கவேண்டியது அல்லது பறை சாற்றவேண்டியதுதான் நம் அழைப்பு என்று சொல்லலாம். அது நம் அழைப்பு. அதுதான் நம் பரம அழைப்பு.

**சாட்சிக்கான இடம்**

இந்த அழைப்பு அப்போஸ்தலர்களாகிய பவுல், பேதுரு போன்றவர்களுக்கு மட்டுமல்ல. "கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டதை செய்து முடித்தேன்," என்று அவர்கள் மட்டும் சொல்வதில்லை. நமக்கும் அந்த அழைப்பைக் கொடுத்திருக்கிறார். நாம் எல்லாரும் ஏதோவோர் இடத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் காண்பிப்பதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம். அது நாம் வேலைபார்க்கிற இடமாக இருக்கலாம். ஒரு வேலை செய்கிறோமென்றால் அந்த இடத்திலே இயேசுகிறிஸ்துவை காண்பிப்பதற்கு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்வோம். வேலைபார்க்கிற இடத்தில் ஒருவரைக்கூட இரட்சிப்புக்குள் கொண்டுவராமல் வேலைபார்க்கிற இடத்தைவிட்டு நாம் கடந்துபோவோமென்றால் அது ரொம்ப துக்கமாக இருக்கும். நான் சொல்கிற இந்த வார்த்தைகள் மிகவும் வன்மையான வார்த்தைகளாக இருக்கலாம். ஆனால் நான் இதைத் துணிந்து சொல்வேன். ஓர் இடத்தில் 5, 10 வருடம் வேலை பார்க்கிறோம். ஆனால், இயேசுகிறிஸ்துவுக்குள் ஒரு மனிதனை நடத்தவில்லையென்றால், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய அழகை, மாட்சிமையை ஒரு மனிதனுக்குக்கூட காண்பிக்கவில்லையென்றால், அவர் எவ்வளவு அற்புதமானவர்! எவ்வளவு மகிமையானவர்! எவ்வளவு மேன்மையானவர்! எவ்வளவு மகத்துவமானவர்! எவ்வளவு போதுமானவர்! எவ்வளவு நிறைவானவர்! இந்தப் பூமியிலே அவரைப்போன்ற செல்வமும் பொக்கிஷமும் வேறு இல்லை என்று ஒருவனுக்குக்கூட காண்பிக்கவில்லையென்றால் அது பரிதாபம். நான் இப்படிச் சொன்னவுடன் நீங்கள் பதற்றப்பட வேண்டாம். "வேலைக்குப் போய்விட்டு வருவது, அங்கே இருக்கிற அதிகாரிகள், அவர்களுக்கு மேலே இருக்கிற ஆட்கள், கீழே இருக்கிறவர்கள், அவர்கள் பண்ணுகிற கெடுபிடி, அவர்களுடைய ஒத்துழையாமை, இவர்களையெல்லாம் சமாளித்துவிட்டு வருவதே பெரிய வேலை. இதற்குமேலே போய் இயேசுகிறிஸ்துவுக்குள் ஒருவனை இழுக்க வேண்டுமா?" என்பதை நீங்கள் கூடுதலான பணிபோல் எடுத்துக்கொள்ள வேண்டாம். இயேசுகிறிஸ்துவை எங்கே காண்பிக்கப் போகிறோம்? நமக்கு மேல்இருப்பவர்கள், கீழ்இருப்பவர்கள், உடன் வேலைபார்ப்பவர்கள், இவர்கள் மத்தியில், இவர்களோடு நடைபெறுகின்ற காரியங்களில்தான் நாம் இயேசுகிறிஸ்துவைக் கொடுக்கிற வேலை நடைபெறுகிறது.

புறம்பான சமாதானத்தோடு வேலைசெய்ய வேண்டும் என்று தயவுசெய்து எதிர்பார்க்காதீர்கள். "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை; உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலுமிருப்பதாக," (யோவான் 14:27) என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொன்னார். "என் சமாதானத்தையே உங்களுக்குத் தருகிறேன்," என்று அவர் சொன்னார். அவர் தருகிற சமாதானம் எப்படிப்பட்டது? என்றைக்காவது ஒருநாள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மனிதனுடைய எதிர்ப்போ, துன்புறுத்துதலே, வருத்தமோ, பாடுகளோ, சித்திரவதையோ இல்லாமல் இந்தப் பூமியிலே வாழ்ந்தார் என்று ஒரு வார்த்தை எழுதியிருக்கிறதா? ஆனால், இரவு தூங்கப் போகும்போது அவர் என்றைக்காவது சமாதானமின்றி தூங்கினாரா? இரவை விடுவோம். பகலில்கூட அவர் சமாதானமுள்ளவராகதான் இருந்தார். எனவே, இயேசுகிறிஸ்துவின் சமாதானம் என்பது "என் அலுவலகத்தில், என் கல்லூரியில் என் அதிகாரிகளும், ஆசிரியர்களும் என்மேல் அன்பாயிருக் கிறார்கள். என்னோடு வேலைபார்க்கிறவர்கள் எல்லாம் என்னோடு ஒத்துழைக்கிறார்கள். எனக்குக் கீழ்இருப்பவர்கள் நான் 'போ' என்றால் போகிறான் 'வா' என்றால் வருகிறான். எனவே நான் சமாதானமாய் இருக்கிறேன்," என்பதல்ல. இது இயேசுகிறிஸ்து தருகிற சமாதானம் அல்ல.

**பரிசுத்த ஆவியானவரின் நடத்துதல்**

நாம் இயேசுகிறிஸ்துவினுடைய பிரதிநிதிகளாக, சாட்சிகளாக, ஒரேவொரு விதத்தில்தான் வாழ முடியும். நேர்கோட்டில்... நேர்கோடு என்றால் பரிசுத்த ஆவியானவர் நடத்துகிற வழி...கிறிஸ்துவின் அடிச்சுவடுகள்...தேவனுடைய வழிகள்; அதில் மட்டும்தான் நாம் வாழ முடியும். அப்படி வாழும்போது இந்த உலகத்தில் நமக்குப் பல நெருக்கடிகள் வரும். "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் இந்த உலகத்தை ஜெயித்தேன்," (யோவான் 16:33) என்று ஆண்டவராகிய இயேசு சொன்னார். நாம் படிக்கிற, வேலைபார்க்கிற அல்லது வேலைபார்க்கப்

போகிற, நாம் வாழ்கிற அல்லது வாழப்போகிற இடம் நம்மை சும்மா விடாது. குறைந்தபட்சம் "அமைதியாக இரு" என்று சொல்லும். "உன் வாயை மூடிக்கொண்டிரு" என்று சொல்லும். நாம் உளறிக்கொண்டு அல்லது பேசிக்கொண்டோ இருப்பதில்லை;

ஆனால் வாழ்க்கைச் சூழல் என்று வரும்போது நாம் தேவனுடைய வழிகளைவிட்டு இடதுபுறம் வலதுபுறம் மாறுவதில்லை. இதுதான் பரிசுத்த ஆவியானவருடைய வழி, அவர் நடத்துகிற வழி என்றால் நாம் இந்த வழியில் மட்டுமே நடப்போம். இது இந்த உலகத்தோடு நமக்கு உராய்வைக் கொண்டுவருகிறது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு நிறைய உராய்வு இருந்தது. மனிதர்களோடு அவருக்கு நிறைய போராட்டங்கள் இருந்தன. போராட்டம் இல்லாத நாளே இல்லை. மதத் தலைவர்களோடு, அரசியல்வாதிகளோடு, உடன்பிறந்த சகோதர சகோதரிகளோடு, உறவினர்களோடு, நண்பர்களோடு. ஒரு கட்டத்தில் "அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது" என்று சொல்லி அவருடைய உறவினர்கள் அவரைப் பிடித்துக்கொண்டு போக வருகிறார்கள். மனிதனுக்கு இதைவிட வேறு என்ன போராட்டம் இருக்க வேண்டும்?

எனவே, இயேசுகிறிஸ்துவின் பிரதிநிதியென்றால் அவனுக்கு இப்படிக்கூட ஒரு கட்டம் வரலாம். நாம் எவ்வளவுதான் தெளிந்த மனதுள்ளவர்களாக வாழ முயன்றாலும் இந்த உலகம் ஏதோவொரு விதத்திலே நம்மைப் பார்த்து, "இவர்கள் பைத்தியக்காரர்கள்" என்று சொல்லும். ஆனால் அப்போஸ்தலர் நடபடிகள் 1:8இல் ஆண்டவர் வாக்குறுதி அளித்திருத்திருக்கிறார். நம் பலத்தால் அவருக்கு நாம் சாட்சிகளாக இருக்க முடியாது. அவருக்கு சாட்சியாக என்றால் நான் மீண்டும் சொல்கிறேன்: பேச வாய்ப்பு கிடைக்கும்போது நாம் பேச வேண்டும். ஒவ்வொரு நாளும் பேச வாய்ப்பு கிடைக்காமல் போகலாம். ஆனால் ஒவ்வொரு நாளும் வாழ்வதற்கு வாய்ப்பு கிடைக்கும். பேசுவது என்றைக்காவது ஒருநாள் இருக்கலாம். ஆனால் வாழ்வது ஒவ்வொரு நாளும்.

**சாட்சி-குடும்பம், அலுவலகம், கல்விக்கூடம், தெரு**

அலுவலகத்தில் காலையில் நுழைந்து வேகம்வேகமாகக் கையெழுத்துப்போட ஓடுகிறேனா அல்லது நிதானமாகக் கையெழுத்துப் போட ஓடுகிறேனா என்பதிலேயே நம் சாட்சி ஆரம்பித்துவிடும். ஒவ்வொரு நாளும் ஒருவர் ஓடிஓடிப்போய்தான் வருகைப்பதிவேட்டில் கையெழுத்துப்போடுகிறார் என்றால் 'சாட்சி, நற்செய்தி, ஜெபம்' ஆகியவைகளைப்பற்றி அவர் நினைத்துக்கூடப் பார்க்க வேண்டாம். "இவர் வருகைப்பதிவேட்டில் கையெழுத்துப் போடுவதற்கு எப்படி ஓடி வருகிறார்," என்று மற்றவர்கள் சொல்லும்போதே இவருடைய சாட்சியை மூடியாயிற்று. அலுவலகத்தின் பொருட்களைப் பயன்படுத்துகிற விதத்தில் நம் சாட்சி விளங்கும். அலுவலகத்திலிருந்து கிளம்பும்போது சாயங்காலம் கையெழுத்துப் போடுவதற்கு எல்லாரும் வரிசையில் நிற்கிறார்கள். ஆனால், இவர் முந்தியடித்துக் கொண்டு முதல் ஆளாகப் போய் நிற்கிறார் என்றால் அதிலும் நம் சாட்சி தெரிய வந்துவிடும்.

குடும்பத்தில் சாட்சியாக இருப்பதைப்பற்றி அடிக்கடி நாம் சொல்லியிருக்கிறோம். குடும்பத்தில் என்றால் கணவன், மனைவி, பிள்ளைகள்தான். ஆனால் அதை நாம் உதாசீனம் செய்யக்கூடாது. வெளியே அலுவலகத்தில் ஒருவரையாவது இயேசுகிறிஸ்துவுக்குள் நாம் ஆதாயம் பண்ணிவிட்டு, நம் பிள்ளைகளைக் கிறிஸ்துவுக்குள் ஆதாயம் பண்ணாமல் விட்டுவிட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. இந்த இரண்டுமே தேவன் மனிதனுக்குக் கொடுத்திருக்கிற பெரிய பொறுப்பு. குடும்பத்தில் இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சியாக இருப்பது. வேலைபார்க்கிற இடத்திலே இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருப்பது. அப்போஸ்தலர் 1:8 எங்கு தெரியுமா அதிகமாகத் தேவை? சுவிசேஷ மேடையில் நின்று பிரசங்கத்தை முழங்குவதற்கு அதிகமாகத் தேவையில்லை. எருசலேம்... குடும்பத்தில் இயேசுகிறிஸ்துவைக் காண்பிப்பதற்கு, அவருக்குச் சாட்சியாக இருப்பதற்கு, வேலை பார்க்கிற இடத்தில் இயேசுகிறிஸ்துவுக்குச் சாட்சியாக இருப்பதற்கு அதிகமாகத் தேவை. 24 மணி நேரத்தில் பெரும்பாலான நேரம் வீட்டிலும், அலுவலகத்திலும்தான் செலவழியும். எனவே, இயேசுவுக்குச் சாட்சியாக வாழ வேண்டிய இடம் வீடு, அலுவலகம் மட்டும் அல்ல. தெரு, கடைபோன்ற எல்லா இடங்களிலும்தான்.

இதற்குப் பரிசுத்த ஆவியானவர் தருகிற ஞானமும், வல்லமையும் வேண்டும். நாம் இன்றைக்கு இந்தியாவில் ஓரளவுக்கு வசதியோடு சாட்சி பகர்ந்துகொண்டிருக்கிறோம். காலங்கள் இப்படி இருக்கப் போவதில்லை. அடுத்த தலைமுறையிலே நம் பிள்ளைகள் வளர்ந்து, "ஏன் இப்படி வாழ வேண்டும்? அப்படி வாழ்ந்தால் என்ன?" என்று கேட்பார்கள். ஏனென்றால் அவர்கள் பள்ளிக்கூடத்தில் அப்படிக் கேட்பார்கள்; அவர்கள் கல்லூரியில் அப்படிக் கேட்பார்கள்; அவர்கள் நண்பர்கள் அப்படிக் கேட்பார்கள். நாம், "அப்படியெல்லாம் கிடையாது. இப்படிதான் வாழ வேண்டும்," என்று போதனை

யாகச் சொல்வோமென்றால் அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நான் சொல்வது உங்களுக்குப் புரிகிறதா? சவால் இன்னும் வரவில்லை. சவால் இனிமேல்தான் வரப்போகிறது.

### பரிசுத்த ஆவியானவரின் அரசாங்கம்

அப்படியானால் இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சியாக இருப்பதற்குரிய வல்லமை எங்கிருந்து வருகிறது? எங்கிருந்து வருகிறதென்றால் தேவன் நமக்கு வாக்குறுதி அளித்திருக்கிறார். "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது". பரிசுத்த ஆவி நமக்குள் வரும்போது நாம் நம் அனுதின வாழ்க்கையில், அன்றாட வாழ்க்கையில், நம் குடும்பத்தில், நம் அலுவலகத்தில் சிறிய பெரிய காரியங்கள் எல்லாவற்றிலும் நடந்துகொள்கிற விதம் வித்தியாசமாக இருக்கும். பலவீனங்கள் வரும் நோய்கள் வரும். அதுவும் நம் சாட்சிக்கு ஒரு சவாலாக இருக்கும். "நோயில் இந்த மனிதன் எப்படி யோசிக்கிறான்! எப்படி வாழ்கிறான்! அதிக வேதனையாக இருக்கும்! வலியாக இருக்கும்! இந்த இருளடைந்த உலகத்திலே இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சியை நாம் எப்படிக் காண்பிப்பது? இந்த உலகம் வல்லமையானதா அல்லது இயேசுகிறிஸ்துவினுடைய சாட்சி வல்லமையானதா?

இந்த உலகம் ஒரு வழியைக் காட்டி, "இந்த வழிதான் சரி," என்று சொல்லும். ஆனால், நாம் நம் பிள்ளைகளிடமும் நம்மோடு வேலைபார்ப்பவர்களிடமும், "இல்லை; அந்த வழி மரண வழி; நாம் வாழ்கிற வழி ஜீவனின் வழி," என்று சொல்கிறோம். இதை நாம் எப்படி நிரூபிப்பது? ஒன்றே ஒன்றுதான் நிரூபணம். என்ன தெரியுமா? தேவன் அதை அங்கீகரிக்க வேண்டும்.

*எலியா*

இஸ்ரயேல் மக்கள் தடம்மாறி, பாகாலை வழிபட்டபோது குறைந்தபட்சம் ஒரு மனிதன் தான் பாகாலுக்குமுன்பாக முழங்கால்படியிடாததாக நினைக்கிறான். எலியா... ஆனால், பாகாலுக்குமுன்பாக முழங்கால்படியிடாத ஏழாயிரம்பேரை வைத்திருப்பதாக தேவன் சொல்கிறார். ஆனால், அதிலும் எலியா முதன்மையானவன். அதில் எந்த சந்தேகமும் இல்லை. தேவனுடைய மக்களுடைய சாட்சி சீர்குலைந்திருக்கும்போது அந்த சாட்சியை நிறுவுவதற்கு ஒரேவொரு வழிதான் இருக்கிறது. *அந்த மனிதன் தேவனுக்கு முன்பாக வாழ்கிற மனிதனாக இருக்க வேண்டும்.* இப்படிப்பட்ட அந்தரங்கமான வாழ்க்கை பரிசுத்த ஆவியினுடைய அரசாட்சிக்கு உட்பட்ட வாழ்க்கையாகும். நான் அடிக்கோடிட விரும்புகிற ஒரே ஒரு வாக்கியம் இதுதான். *அந்த மனிதன் வாழ்கிற தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை, அந்தரங்கமான வாழ்க்கை, பரிசுத்த ஆவியானவருடைய அரசாங்கத்தின்கீழ் இருக்கிறது.* It should be under the government of the Holy Spirit. வெளியே அல்ல. அந்தரங்கமான, தனிப்பட்ட வாழ்க்கை.

எலியாவைக்கொண்டு தேவன் ஒரு சாட்சியை நிறுவினார். இது மிகவும் பிரமாண்டமான சாட்சி. வாலிபர்களாக இருந்தபோது இதை நினைத்துப்பார்த்துப் பரவசமடைந்ததுண்டு. பாகால் தீர்க்கதரிசிகள் நாள் முழுவதும் ஆடுகிறார்கள், பாடுகிறார்கள், ஜெபிக்கிறார்கள்; காலையிலிருந்து மாலைவரை ஒருநாள் ஜெபம். ஆனால், எலியாவின் ஜெபத்தை வாசித்துப் பாருங்கள். அந்த ஜெபத்தை ஒருநிமிடத்தில் வாசித்து முடித்துவிடலாம். வேதாகமத்தில் பல ஜெபங்கள் இருக்கின்றன. எபேசியர் 1, 3இல் பவுல் ஜெபம் எழுதியிருக்கிறார். அதன் பொருள் அவர் அவ்வளவுதான் ஜெபம் பண்ணினார் என்பதல்ல. அவர் உண்மையிலேயே அரைமணிநேரம் ஜெபித்திருப்பார். ஆனால் அதன் சாராம்சம் அவ்வளவுதான். அந்த சாராம்சம்தான் 30 வினாடிகள் வருகிறது. ஜெபம் 30 நிமிடங்கள் இருக்கலாம். எனவே, வேதாகமத்தில் 30 வினாடி ஜெபம் என்றால் உடனே இயேசுகிறிஸ்து 30 வினாடிதான் ஜெபம் பண்ணினார் என்று அர்த்தம் கிடையாது. ஆனால், எலியாவைப்பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்றால் உண்மையிலேயே அவன் அவ்வளவுதான் ஜெபித்திருப்பான். அதை நாம் வாசித்துவிடலாம். "ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே! இஸ்ரயேலிலே நீர் தேவனென்றும், நான் உம்முடைய ஊழியக்காரரென்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்டி செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும். கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்புனீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும்" (1 இரா. 18:37-38). அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது. இதுபோல் நடந்தால் இவர்களெல்லாம் "இயேசுவே தேவன்" என்று சொல்வார்களா? "இயேசுகிறிஸ்துவுடைய வழியே ஜீவ வழி" என்று சொல்வார்களா? சொல்வார்கள். இந்த அளவுக்கு வல்லமையோடு நம்முடைய சாட்சி இருக்கிறதா?

வல்லமையான சாட்சிக்குப் பின்புலம் என்னவென்றால் இந்த மனிதன் தனிப்பட்ட அந்தரங்க வாழ்க்கையிலே பரிசுத்த ஆவியானவருடைய அரசாங்கத்தின்கீழ் வாழ்கிறான்.

இந்த உலகத்திலே நாம் பெற வேண்டிய எல்லா நன்மைகளையும் இன்பங்களையும் சுபிட்சத்தையும் பெற்று அனுபவிக்க வேண்டும் என்ற ஈடுபாடு அவனுக்கு இல்லவே இல்லை. பழைய ஏற்பாட்டிலே எலியா. புதிய ஏற்பாட்டிலே யோவான் ஸ்நானன். இந்த இரண்டு பேரும் மிகவும் முரட்டுத்தனமான வர்கள்போலத் தோன்றுவார்கள். நீங்கள் எலியாவின் வாழ்க்கையை வாசித்துப் பாருங்கள். தேவன் அவனை “மறைந்துகொள்” என்று சொல்கிறார். “போய் தீர்க்கதரிசனம் உரை” என்று சொல்கிறார். “நான் சொன்னாலன்றி மூன்று வருடங்களும் ஆறு மாதமும் மழை பெய்யாது” என்று சொல்லிவிட்டு அவன் போய் மறைந்து கொள்கிறான்.

இன்னொரு தீர்க்கதரிசி இருக்கிறார். ஆண்டவர் அவரிடம், “நீ போய் பலிபீடத்துக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொல். நீ அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும், போன வழியாய்த் திரும்பா மலும் இருவென்று கர்த்தர் தம்முடைய வார்த்தையால் கட்டளையிட்டார். திரும்பி வரும்போது வேறே பாதையில் வா. போன பாதையில் திரும்பி வராதே. ஏனென்றால் அதே பாதையில் திரும்பி வந்தால் மக்களுக்குத் தெரிந்துவிடும். ‘நம் தெருவில் போன பிரபலமான தீர்க்கதரிசி’ என்று போகும் போதும் வரும்போதும் தெருவில் தோரணம் கட்டி, கட்அவுட் வைத்து, குழல் விளக்குகள் மாட்டி ‘தேவனுடைய மனிதன்’ என்று துண்டுப்பிரசுரம் அச்சடித்து, அதிலே ஒரு புகைப்படம் போட்டு உன் னைக் கதாநாயகனாக மாற்றிவிடுவார்கள்,” என்று சொல்லுகிறார்.

எலியாவிடம், “நீ தீர்க்கதரிசனம் உரை. மறைந்துகொள்,” என்று சொல்கிறார். அவன் மறைந்துகொண் டான். காலையிலும், மாலையிலும் தேவன் அவனைப் போஷித்தார். ஒருநாள் அவன் இருந்த ஆற் றில் தண்ணீர் வற்றிப்போனபோது தேவன் அவனை ஒரு விதவையின் வீட்டிற்கு அனுப்புகிறார். அவ னுடைய வாழ்க்கை முழுவதும் பரிசுத்த ஆவியானவருடைய அரசாங்கத்தின்கீழ் இருந்த வாழ்க்கை யாக இருந்தது. ஏற்கெனவே பல ஆண்டுகள் அந்த ஓடைத் தண்ணீரையும் காலையிலும், மாலை யிலும் காகம் கொண்டுவந்த சாப்பாட்டையும் சாப்பிட்டுவிட்டு வாழ்கிறான். அந்தத் தண்ணீர் வற்றிப் போனபிறகு, “ஒரு விதவையின் வீட்டிற்குப் போ. நான் உன்னை அங்கே போஷிப்பதற்கு ஏற்பாடு செய்வேன்,” என்று தேவன் சொல்கிறார். மறைமுகமான வாழ்க்கை. அந்தரங்கமான வாழ்க்கையில் அவன் பரிசுத்த ஆவியானவருடைய அரசாட்சியின்கீழ் வாழ்கிறார்.

*பரிசுத்த ஆவியானவரின் ஆளுகை*

நாம் நம் அலுவலகத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? கண்டிப்பானவர்களாக இருக்க வேண் டுமா அல்லது மென்மையானவர்களாக இருக்கவேண்டுமா? நாம் கண்டிப்பானவர்களும் இல்லை, மென்மையானவர்களும் இல்லை. சிலருடைய பார்வைக்கு நாம் கண்டிப்பானவர்களாகத் தோன்று வோம். சிலருடைய பார்வைக்கு நாம் மென்மையானவர்களாகத் தோன்றுவோம். சிலருடைய பார் வைக்கு சில வேளைகளில் நாம் கண்டிப்பானவர்களாகத் தோன்றுவோம். சில வேளைகளில் நாம் மென்மையானவர்களாகத் தோன்றுவோம். நாம் மிகவும் விசித்திரமானவர்கள். ஏனென்றால் நாம் பெற் றிருக்கிற நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அப்படிப்பட்டவர். அவர் கண்டிப்பானவரா அல்லது மென்மையானவரா? அவர் கண்டிப்பானவரும், மென்மையானவரும்கூட.

ஒருநாள் ஒரு வாலிபன் அவரிடம் வந்து, அவருக்குமுன்பாக முழங்கால்படியிட்டு, “நல்ல போதகரே நித்திய ஜீவனைத் சுதந்தரித்துக்கொள்வதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?” (மாற்கு 10:18) என்று கேட்கிறான். “விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பா யாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, வஞ்சனை செய்யாதிருப்பாயாக, உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக,” என்று அவர் சொல்லுகிறார். “நான் இவைகளெல்லாம் என் சிறு வயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன்,” என்று பதில் சொன்னான். இயேசு அவனைப் பார்த்து, “உன்னிடத்தில் ஒரு குறை உண்டு,” என்று சொன்னார்.

“உன்னிடத்தில் ஒரு குறை உண்டு” என்று சொல்வதற்கு அதிகமான அன்பு வேண்டும். நாம் நம் அலுவலகத்தில் “இது தேவனுடைய அளவுகோலைப் பொறுத்தவரை குறைவு” என்று துணிந்து சொல்லவேண்டுமா சொல்லக் கூடாதா? துணிந்து சொல்ல வேண்டும். ஆனால், நாடகப்பாணியில் நாம் சொல்லக் கூடாது. ஆனால் நாம் அதைச் செய்ய மாட்டோம். இது தேவனுக்கு ஒத்ததல்ல.

### கிறிஸ்து தேவனுடைய அளவுகோல்

தேவனுடைய தீர்க்கதரிசிகள், தேவனுக்கு சாட்சியாக வாழ்கிறவர்கள், தேவனுடைய அளவுகோலைக் குறைப்பதோ கூட்டுவதோ இல்லை. "இதுதான் தேவனுடைய அளவுகோல். தேவனுடைய அளவு கோலின்படி இது குறைவுபடுகிறது. இது நிறைவாக இருக்கிறது," என்று சொல்ல வேண்டும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே அப்படிதான் சொல்கிறார். திருவெளிப்பாடு 2-3 அதிகாரங்களில் அவர் அப்படிச் சொல்கிறார். அவர் ஒவ்வொரு சபையையும் தம்மையே அளவுகோலாக வைத்து அளந்துபார்த்து, "என்ன குறைவுபடுகிறது" என்று சொல்லிவிடுகிறார். அன்போடும் சொல்கிறார், மிகக் கோபமாகவும் சொல்கிறார்.

நம் பிள்ளைகளாக இருந்தாலும் சரி, வாழ்க்கைத் துணையாக இருந்தாலும்கூட சரி. "தேவனுடைய அளவுகோலின்படி இது குறைவுபடுகிறது," என்று சொல்ல வேண்டியிருக்கும்.

எனவே, நாம் இந்த உலகத்திற்கு சாட்சியாக இருக்கிறோம். நம்மைக்கொண்டு இந்த உலகம் அவர் களை அளந்துபார்க்கும். "நான் சுவிசேஷம் சொன்னேன்; அவர்கள் கேட்கவில்லை" என்று நாம் கவ லைப்பட வேண்டாம். நாம் அறிவிக்கிற சுவிசேஷத்திற்கு வல்லமையும், வீரியமும் உண்டா என்று நாம் தேவனுக்குமுன்பாகச் சரிசெய்துகொண்டால் போதும். "ஆண்டவரே, நான் உம் அரசாங்கத்தின் கீழ் வாழ விரும்புகிறேன். உம் அளவுகோலை நான் கோணல் மாணலாகச் செயல்படுத்த விரும்ப வில்லை. இதுதான் உம் அளவுகோல் என்றால் மனிதர்களுடைய முகத்தைப் பார்த்து "சரியைத் தவ றென்றும் தவறை சரி" என்றும் நான் சொல்ல விரும்பவில்லை.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றி பரிசேயர்கள் கொடுக்கிற சாட்சி அது. "போதகரே எந்த மனிதனைக்குறித்தும் உமக்குக் கவலையில்லை". Good is good. Poor is poor. Excellent is excellent. உனக்குப் பல எதிரிகள் வருவார்கள். "பரவாயில்லை என்றால்" எல்லாரும் நண்பர்களாயிருப்பார்கள்.

எனவே சாட்சியாக இருக்கவேண்டுமென்று நான் சொல்லும்போது அங்கு இருக்கிற எல்லா மக்களுக் கும் அவர்கள் தவறு செய்தால், அவர்களுடைய வழிகள், அளவுகோல் எப்படியிருந்தாலும் சரி அவர்கள் செய்வதெல்லாம் சரிதான் என்பதல்ல சாட்சி. "இதுதான் தேவனுடைய அளவுகோல்" என்று காட்டுவது நம் சாட்சியாகும். இதற்கு அர்த்தம் நான் குற்றம் கண்டுபிடிக்கிறவான் என்பதல்ல. ஆண்ட வராகிய இயேசுகிறிஸ்து, "இது ஜீவனுக்குப் போகிற வழி. இது மரணத்திற்குப் போகிற வழி" என்று மக்களுடைய வாழ்க்கையிலே அவர் தீர்க்கிறார்.

வேலைபார்க்கிற இடத்திலே தேவையுள்ள மக்கள் இருப்பார்கள். பல சமயங்களில் நாம் பயன் படுத்துகிற அளவுகோல் வெறும் மனித அளவுகோலாக இருக்கும். தேவனுடைய அளவுகோலாக இருப்பதில்லை. இதை நான் அடிக்கடி சொல்லியிருக்கிறேன். மனிதன் அளக்கிற விதம் வேறு. தேவன் அளக்கிற விதம் வேறு. விபச்சாரியை கையும் மெய்யுமாய் இயேசுகிறிஸ்துவிடம் பிடித் துக்கொண்டு வருகிறார்கள். மனிதன் அளக்கிற அளவுகோல் வேறு. தேவன் அளக்கிற அளவுகோல் வேறு. மனிதன் அளக்கிற அளவுகோலின்படி மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி அவளைக் கல் லெறிந்து கொல்ல வேண்டும். அது மனிதனுடைய அளவுகோல். இயேசுகிறிஸ்துவும் ஒரு அளவு கோலைப் பயன்படுத்துகிறார். அந்த அளவுகோலின்படி "உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்" (யோவான் 8:7). (அலுவலகத்தில் ஒரு ஆளைப்பற்றி எல்லாரும் ஒரு கருத்தை வைத்திருப்பார்கள். நாமும் அதே கருத்தை எடுத்துக்கொள்வோம்). இதற்கு அர்த்தம் அவருடைய அளவுகோலின்படி அவர் சொல்வது "ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா? உன்னைக் கல்லெறியவில்லையா? நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க் கிறதில்லை. நீ போ; இனி பாவஞ்செய்யாதே". அதோடு பரிமாற்றம் முடிந்துவிட்டது. அதற்குப்பிறகு, "இனி நீ எப்படி வாழ வேண்டும்," என்று பெரிய பிரசங்கம் எல்லாம் ஒன்னும் கொடுக்கவில்லை. நாம் அளப்பதற்கு முன்பு பரிசுத்த ஆவியானவருடைய ஞானத்தின்படி அந்த மனிதனை நாம் பகுத் துணர வேண்டும்.

### பரிசுத்த ஆவியானவரைக்கொண்டு அறிதல்

வாடச்மேன் நீ எழுதியுள்ள "The Character of the Lord's worker" என்ற ஒரு புத்தகம் உண்டு. "The Character of the Lord's worker" அல்லது "The Normal Christian Worker" என்றும் வைத்துக்கொள்ள லாம். அந்தப் புத்தகத்தின் முதல் அதிகாரம் He should be a lover of the man. அவன் மனிதர்களை அன்புகூருகிறவனாக இருக்க வேண்டும். இரண்டாவது அதிகாரம் என்ன தெரியுமா? அவன் நன்றாகச் செவிகொடுக்கிறவனாக இருக்க வேண்டும். அவன் நன்றாகச் செவிகொடுத்துக் கேட்க வேண்டும்.

சொல்கிற வார்த்தையை நன்றாகச் செவிகொடுத்துக் கேட்க வேண்டும். சொல்லப்படாத வார்த்தை யையும் கவனிக்க வேண்டும். கண்ணால் பார்ப்பதையும் கவனிக்க வேண்டும். கண்ணுக்குத் தென் படாததையும் கவனிக்க வேண்டும். கண்ணால் கேட்க வேண்டும் காதால் கேட்க வேண்டும். எல்லா வற்றையும் நாம் நம் ஆவியைக்கொண்டு பரிசுத்த ஆவியானவருக்குச் செவிகொடுக்க வேண்டும்.

இதைக் கேட்டவுடன் "பரிசுத்த ஆவியானவருக்குச் செவிகொடுப்பது எப்படி?" என்று நாம் பதற்றப் பட வேண்டாம். அது முடியும். இதயத்துடிப்பை இதயத்துடிப்புமானியைவைத்துப் பார்த்திருக்கிறீர் களா? சத்தம் தெளிவாக கேட்கும். தெரியாத ஆளுக்கு "ஐயையோ எண்ணிக்கையை விட்டுவிட்டால் என்ன ஆகும்!" என்று மிகப் பதற்றமாக இருக்கும். அதில் அனுபவப்பட்டவனுக்கு எந்தப் பதற்றமும் இல்லை.

பரிசுத்த ஆவியானவருடைய அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்று தீர்மானித்த ஒரு மனிதன் உண்மையிலேயே தன்னைச் சுற்றியுள்ள மனிதர்களையும், சூழ்நிலைகளையும் பகுத்துணர வேண்டும். அது அவனால் முடியும். வேலை பார்க்கிற இடத்திலே ஒருவர் வந்து பேசுகிறார் என்று வைத்துக்கொள்வோம். எப்போது அவர்கள் அளவுக்கு மீறி பேசுகிறார்கள்...எப்போது அவர்கள் அள வோடு பேச வேண்டும் என்பதைப் பகுத்துணர வேண்டும். "இல்லங்க. நாங்கள் மிகவும் அன்புள்ள வர்கள். ஒருவர் பேசிக்கொண்டேயிருக்கிறார். கேட்டுக்கொண்டே இருக்கவேண்டுமா அல்லது 'போதும், நிறுத்துங்கள்' என்று சொல்ல வேண்டுமா? அவர் பேசுகிற ஒரு காரியம் எனக்குப் புரிந்து விட்டது என்றால் அவர்களை நிறுத்த வேண்டுமா அல்லது அவர் சொல்வதையெல்லாம் கேட்க வேண்டுமா அல்லது அவர்கள் சொல்ல ஆரம்பிக்கும்போது நிறுத்த வேண்டுமா?"என்பதை எப்படி நிதானிப்பது என்றால் அதற்கு எந்த அளவுகோலும் இல்லை. ஒரேவொரு அளவுகோல் உண்டு. பரிசுத்த ஆவியானவர் என்ற அளவுகோல்.

தன் மகன் செத்துப்போனபின்பு சூனேமியாள் வந்து எலிசாவின் காலைப் பிடித்துக்கொள்கிறாள். அப்போது எலிசாவினுடைய வேலைக்காரன் கேயாசி அவளை விலக்கிவிடுகிறான். தேவனுடைய தீர்க்கதரிசி, "நீ அவளைத் தடுக்காதே. அவள் ஆத்துமாக துக்கமாயிருக்கிறது. கர்த்தர் அதை எனக்கு அறிவியாமல் மறைத்துவைத்தார்" என்று சொன்னான். "அவளுடைய நிலை என்னவென்று எனக்குப் தெரியவில்லையே" என்று அவன் தன் நிலையை உணர்ந்து அங்கலாய்க்கிறான். தன் நிலையை அவன் உணர்ந்துகொள்கிறான். "அவளுடைய நிலையை நான் அறியவில்லையே ஏன்?"

அவருடைய சாட்சியாக வாழ்வதென்றால் கழுத்தில் சிலுவையை மாட்டிக்கொள்வதோ, சட்டைப் பையில் வசனத்தைத் தைத்து வைத்துக்கொள்வதோ அல்ல. சாட்சி என்பது நம் பிள்ளைகள், பெற் றோர்கள், உறவினர்கள், நண்பர்கள் தொடங்கி யார் யாரோடெல்லாம் நாம் தொடர்புகொள்கிறோமோ அவர்களுக்குக் கிறிஸ்துவைக் காண்பிப்பது. அந்தப் பொறுப்பும், அழைப்பும் நம் எல்லாருக்கும் இருக்கிறது. நாம் போடுகிற உடை, நாம் பார்க்கிற விதம், நடக்கிற விதம், சாப்பிடுகிற விதம், போகிற விதம், வருகிற விதம் எதுவும் யாரையும் பாதிக்காது என்று நாம் நினைக்கிறோம். ஆனால், ஒருவன் தன் *15* வயதிலே மனமுவந்து தன் வாழ்க்கையை இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுப் பானா இல்லையா என்பதை ஒரு சிறு விதத்திலே நாம் பாதிக்கிறோம். நாம் ஒரு தாக்கத்தை ஏற் படுத்துகிறோம். நேர்மறையாகவே, எதிர்மறையாகவோ. இதை நீங்கள் உணர்கிறீர்களா? நம் பிள்ளைகள் நம்மைப் பார்ப்பதில்லை என்று நாம் நினைக்கிறோம். நம் பிள்ளைகள் மிகக் கூர்மை யாக நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் என்று ஒரு வி.ஜே.பிலிப் என்று ஒரு முதல்வர் இருந்தார். அன் புக்குரிய சகோதரர் அவர். அவர் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரம்; ஆனால் அவர் இன்னும் பொறுப்பு எடுக்காத நேரம். அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரத்தில் ஏற்கெனவே ஒரு முதல்வர் இருக் கிறார். ஏற்கெனவே இருந்த முதல்வர் துறைத் தலைவர்களுக்காக ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய் திருந்தார். எல்லாத் துறையின் தலைவர்களையும் அந்தக் கூட்டத்துக்கு வரச்சொல்லியிருந்தார்கள். எனவே, நானும் அந்தக் கூட்டத்துக்குப் போயிருந்தேன். தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வர் கூட்டத்துக்கு வந்துகொண்டிருந்தார். அவரைக்குறித்து அங்கிருந்த அலுவலக உதவியாளர் என்ன சொன்னார் தெரி யுமா? "வந்துவிட்டாரையா! விடவே மாட்டாரையா! இவர் வந்து பத்து நிமிஷத்திற்கு முன்னாடியே வந்துவிடுவாரே," என்று அவர் அதை நகைச்சுவையாகச் சொன்னார். ஆனால், அது மாபெரும் சாட்சி. அந்த மனிதனைப்பற்றி சாட்சி கொடுப்பது யார்? அலுவலக உதவியாளர். "நான் போகி றேன், வருகிறேன். ஒரு அலுவலக உதவியாளர் நம்மையெல்லாம் கவனிக்கவா போறார்" என்று நாம் நினைப்போம். அவர்கள் நம்மைக் கவனிக்கிறார்கள். அந்த அலுவலக உதவியாளர் இயேசு

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வாரா இல்லையா என்பதற்கு அந்த முதல்வர் ஒரு விதையை விதைத்திருக்கிறார்.

எனவே, அருமையான சகோதர சகோதரிகளே! நாம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சாட்சியாக இருப்போம். இரண்டே இரண்டு காரியங்களைத்தான் நான் வலியுறுத்துகிறேன். ஒன்று, *பரிசுத்த ஆவியானவர் வல்லமையைத் தருகிறார் என்றால் நம் மறைவான தனிப்பட்ட அந்தரங்க வாழ்க்கையிலே பரிசுத்த ஆவியானவருடைய அரசாங்கத்திற்கு முற்றுமுடிய கீழ்ப்படிந்து வாழும்போது, அந்த மனிதன் பொதுவாழ்விற்கு வரும்போது பரிசுத்த ஆவியானவர் அவனைப் பயன்படுத்துவார்.* எலியா உள்ளே ஜெபிக்கிற ஜெபம் 3 மணி நேர ஜெபமாக இருக்கும். ஆனால் வெளியரங்கமாக ஜெபிக்கிற ஜெபம் 30 வினாடிகள்தான். வெளியரங்கமாக நாம் பண்ணுகிற ஜெபம் எப்படிதான் இருக்க வேண்டும்? "கேளும்! கர்த்தாவே கேளும்." இது நான் முதலாவது சொன்னது. ஜெபம் மட்டுமல்ல. அந்தரங்கத்தில் பார்க்கிற உங்கள் பிதா வெளியரங்கமாய்ப் பலனளிப்பார். அதில் காரியம் வெளியே இல்லை. காரியம் எங்கே இருக்கிறது? நம் பிள்ளைகள், "ஆ! என் தகப்பன், என் பெற்றோர் நடக்கிற அதே வழியில் நான் நடக்க விரும்புகிறேன்," என்பது யாருடைய கையில் இருக்கிறது? இன்றைக்கு நாம் பரிசுத்த ஆவியானவருடைய அரசாங்கத்தின்கீழ் கீழ்ப்படிந்து வாழ்கிற வாழ்க்கையைச் சார்ந்திருக்கிறது.

இரண்டாவது, சாட்சி மிக முக்கியமானது. *பரிசுத்த ஆவியானவரைக்கொண்டு நம்மோடு தொடர்புகொள்கிற மக்களை நாம் அறிய வேண்டும், நிதானிக்க வேண்டும். தீர்க்க வேண்டும்.* இந்த இரண்டையும் நாம் செய்வோமென்றால் நிச்சயமாக நாம் இயேசுகிறிஸ்துவுக்கு ஜீவனுள்ள சாட்சிகளாக இருப்போம்.

மறைவான அந்தரங்கமான தனிப்பட்ட வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவருடைய அரசாங்கத்திற்குக் கீழப்படிந்து வாழ்வது. இரண்டாவது நம்மைச் சந்திக்கிற அல்லது நாம் சந்திக்கிற, நாம் பார்க்கிற, தொடர்புகொள்கிற எல்லா மனிதரோடும்-சிறியவர்கள் தொடங்கி பெரியவர்கள்வரை-கிறிஸ்துவைக் கொண்டு, பரிசுத்த ஆவியானவரைக்கொண்டு, நாம் தீர்க்க வேண்டும் அல்லது நிதானிக்க வேண்டும். அப்போது சில சமயங்களில் நாம் நிறுத்திடலாம்; சில சமயங்களில் அவர்கள் அழுவார்கள்; அதை நாம் கேட்க வேண்டும். சில சமயங்களில், "இது குறைவுபடுகிறது," என்று சொல்ல வேண்டும். சில சமயங்களில், "நீ போ; இனி பாவம் செய்யாதே," என்று சொல்ல வேண்டும் .ஆனால் இன்றைக்கு அப்படிப்பட்ட ஜீவனுள்ள சாட்சி மிகக் குறைவாக இருக்கிறது. அப்படிப்பட்ட சாட்சிகளாக இருக்க வேண்டும் என்று நாம் வாஞ்சிக்க வேண்டும். தேவன் நமக்குக் கிருபை தருவார். Praise the Lord.